# சம்மாந்துறை பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 18 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 ஒக்டோபர் 13 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜனவரி 29 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, சம்மாந்துறை பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சம்மாந்துறை பிரதேச சபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிசார் கூற்றுக்கள் சேர்ந்து நின்ற அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்தக்களுக்கான மாற்றீட்டுக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வில்லை.

## 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(2) ஆம் பிரிவிற்கமைய நிதிசார் கூற்றுக்களில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மின் விநியோகம் சபையினால் இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மின் பாவனையாளர்களது நிலுவையான ரூபா 3,462,663 வருவாய்க் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) மின்சார உபகரணங்களது பெறுமதியான ரூபா 95,671 நேரடி சரி, பிழை பார்த்தலால் உறுதி செய்யப்படாது புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் அமைந்திருந்தது.

(ஈ) இறைச்சிக் கடைகளது குத்தகைக்கான ரூபா 6,728,840 வைப்புத் தொகையானது சபையின் வருவாய்க் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

## 1.3.3 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டைக் கடந்துவிட்ட கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளது தொகை ரூபா 19,877,059 ஆகும்

## 1.3.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 | |
| விதி 218 | காணியும் கட்டிடங்களும் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களால் சரி, பிழை பார்க்கப்படவில்லை. |
| விதி 180 | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்ய வில்லை. |
| விதி 217 | பீஎஸ் 46க்கமைய நிலையான சொத்துப் பதிவேடு ஒன்றைப் பேணவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 104(1) | நூலகத்தின் 597 புத்தக இழப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை |
| நிதிப்பிரமாணம் 396 | ஆறு மாதங்களுக்கு மேலாகக் காசாக்கப்படாது இருக்கும் ரூபா 4,000 பெறுமதியான 4 காசோலைகள் தொடர்பாக வங்கியில் விசாரித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,622,710 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,718,278 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 540 | 355 | 2,162 |
| (ii) | குத்தகை வாடகை | 8,722 | 8,364 | 17,472 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 664 | 664 | 142 |
| (iv) | ஏனைய வருவாய் | 8,191 | 5,699 | 2,491 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 டிசெம்பர் 31 வரை சம்மாந்துறை மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தால் அறவீடு செய்யப்பட்டு தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணமாகிய ரூபா 3,988,819 அறவீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3 செலவின அமைப்பு

மீளாய்வாண்டிற்கான சபையின் வரவு, செலவுத்திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினமும் வேறுபாடுகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 29,011 | 24,459 | 4,552 |
| ஏனையவை | 19,360 | 4,735 | 14,625 |
| உபமொத்தம் | 48,371 | 29,194 | 19,177 |
| மூலதனச் செலவினம் | 64,500 | 5,436 | 59,064 |
| நிகர மொத்தம் | 112,871 | 34,630 | 78,241 |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரம் கீழே தரப்பட்டள்ளது

| பதவியின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்றுநர் | 01 | - |
| உதவு தரத்தினர் | 22 | 20 |
| ஆரம்ப தரத்தினர் | 52 | 52 |
| ஏனையோர் | - | 31 |
| | 75 | 103 |

=== ===

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகள் ரூபா 28,838,860 ஆகும். இதில் ஓராண்டிற்கு மேற்பட்ட தொகை ரூபா 25,439,332 ஆகும்.